உதயன்

விலை ரூபா 6-00

Registered as a newspaper

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 தை 13 திங்கட்கிழமை (26-01-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 51

# கண்டி தலதா மாளிகையில் நேற்று குண்டுத் தாக்குதல்!

## 11 பேர் உயிரிழப்பு 29 பேர் காயம்

கொழும்பு, ஜனவரி 26

கண்டி தலதாமாளிகைக்கு முன்பாக நேற்றுக் காலை சக்திமிக்க வாகனக் குண்டு ஒன்று வெடித்தது.

இச் சம்பவத்தில் 11 பொதுமக்கள் உயிரிழந்தனர். 29 பேர் காயமடைந்த னர்; அப்பகுதியில் உள்ள கட்டடங்கள், கடைகள் ஆகியவற்றுக்கு சேதங்கள் ஏற் பட்டன.

நேற்றுக் காலை 6.10 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றது.

லொறி ஒன்றில் எடுத்து வரப்பட்ட குண்டே வெடித் தது.

குண்டு வெடிப்பால் தலதா மாளிகையின் நுழைவாயிலின் பத்தி வட்டம், எண்கோண மண்டபக் கூரை, மாளிகை யின் கீழ்மாடம் ஆகியன சேத மடைந்தன.

மாளிகையின் உட்பக்கத் துக்கு சேதம் ஏற்படவில்லை என்றும் —

மாளிகையில் வைக்கப்பட்டி ருந்த புனித தந்தத்துக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தலதாமாளிகைத் தாக்குதல் காட்டுமிராண்டித் தனமானது

### டக்ளஸ் தேவானந்தா கண்டனம்

கொழும்பு, ஜன. 26

தலதா மாளிகைக்கு முன்னால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாய கம் டக்ளஸ் தேவானந்தா கண்டித்துள்ளார்.

இந்தக் குண்டுத் தாக்குதல் மனிதத் தன்மையற்ற காட்டுமிராண்டித்தனமான செயல் என்று அவர் யாழ்ப்பா ணத்தில் இருந்து ரூபவாஹினிக்குத் தெரிவித்ததாக ரூபவா ஹினி கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளும் புலிகளின் பிரச்சினை களும் வேறுபட்டவை. இதனைச் சிங்கள மக்களும் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

(இ)

## ஜனாதிபதி சேதங்களை நேரில் பார்வையிட்டார்

கொழும்பு, ஜன. 26

ஜனாதிபதி சந்திரிகா குமா ரதுங்க நேற்றுப் பிற்பகல் கண்டிக்கு விஜயம் செய்து தலதா மாளிகைக்கு ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட் டார்.

தலதாமாளிகையின்வெளிப் புற கட்டடங்களுக்கு ஏற்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அனுருத்த மீது ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 26

''கண்டி தலதாமாளிகை குண்டு வெடிப்புக்குப் பொறுப்பேற்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பத வியை அனுருத்த ரத்வத்த துறக்க வேண்டும்.''

இப்படி எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிர சிங்க கோரிக்கை விடுத் துள்ளார்.

தலதாமாளிகையைப் பாதுகாக்க ஜனாதிபதியும் அரசினரும் தவறிவிட் டவர் என்று அவர் குற்றஞ் சாட்டினார்.

''சுதந்திர தினத்தன்று வவுனியா — யாழ்ப்பாணம் தரைவழிப் பாதையைத் திறந்து அங்கிருந்து பயணி கள் பஸ் ஒன்றைக் கண் டிக்குக் கொண்டுவர அரசு திட்டமிட்டிருந்ததாகக் கூறப்பட்டது. யுத்தத்தின் மூலம் அரசியல் ஆதாயம் தேடவே பிரதிப் பாது காப்பு அமைச்சர் அனு ருத்த ரத்வத்த முயற்சிக் கின்றார் என்றும் ரணில் கூறினார்.

(இ-3)

## கட்சிகளின் தேர்தல் பிரசாரம் இன்றுடன் முடிவு

கொழும்பு, ஜன. 26

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல உள்ளூராட்சிச் சபை களுக்கும், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைக்கும் எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவிருக் கும் தேர்தல் தொடர்பான சகல பிரசாரக் கூட்டங்களும் இன்று நள்ளிரவு 12.00 மணி யுடன் முடிவடையும்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க நேற்று வெளியிட்ட செய்திக் குறிப் பில் இதனைத் தெரிவித்துள் ளார்.

(இ-8)

# லொறியிலிருந்து சரமாரியாகச் சூடு!

கொழும்பு, ஜன. 26

ராஜ வீதியில் அமைந்துள்ள வீதிச் சோதனை நிலை யம் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட வாறு குண்டு நிரம்பிய லொறி தலதா மாளிகைக்கு முன்பாக சென்றபோது குண்டு வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

தலதா மாளிகையைச் சுற்றியுள்ள பகுதிகளை பழுது பார்க்கும் வேலைகளை மேற்கொள்ளத் தேவையான சாத னங்களை ஏற்றி வருவதாகத் தெரிவித்து ராஜ வீதி வரை இந்த லொறி சென்றுள்ளது என்றும்—

ராஜ வீதியில் சோதனைச் சாவடியில் நின்ற பொலீ ஸார் லொறியை நிறுத்த முற்பட்டதாகவும்—

அச்சமயம் லொறியில் இருந்து சரமாரியாக வேட்டுக் கள் தீர்க்கப்பட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

வேட்டுக்கள் ஒருபுறம் தீர்க்கப்பட அந்த லொறி மாளிகைக்கு முன் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு சென்றதும் குண்டு வெடித்தது

இக் குண்டு வெடிப்பால் கண்டி நகரமே அதிர்ந்தது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு எதிராக வன்செயல்கள் கல் வீச்சு, தீவைப்பு சம்பவங்கள்

கொழும்பு, ஜன. 26

கண்டி தலதாமாளிகையில் நேற்றுக் காலை குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றதையடுத்து அங்கு தமி ழருக்கு எதிரான வன்முறை கள் இடம்பெற்றிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரி விக்கின்றன.

சுமார் 200 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று தமிழர் களுக்கு எதிரான கோஷங் களை எழுப்பியவாறு வீதி களில் சென்று தமிழர்களின் உடைமைகள் மீது கல்வீச்சு நடத்தியது.

நேற்றுக் காலை பேரா தனை பொலீஸ் நிலையத் துக்கு முன்பாகவுள்ள கட்டுக் கலை செல்வ விநாயகர் ஆல யத்தை ஒரு குழு தாக்க முற் பட்ட சமயம், பொலீஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி அக்குழுவை விரட்டி விட்டதாகத் தெரிவிக்கப்பட் டது.

அதன்பின் நகரில் உள்ள தமிழர்களின் கடைகள், வீடு கள் நோக்கி கல்வீச்சுகள் இடம்பெற்றன.

பலகடைகளின் பெயர்ப்பல கைகள் அடித்து நொறுக்கப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொன் விழா வைபவம் திட்டமிட்டபடி நடைபெறும்

### அரசாங்கம் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜன. 26

சுதந்திர பொன் விழா வைபவம் கண்டியில் திட்ட மிட்டபடி நடைபெறும் என்று அரசாங்கம் அறிவித்துள் ளது.

''சுதந்திரதின பொன் விழாவைக் குழப்பவே இந்த தாக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## லக்ஷ்மன் ஜெயக்கொடியின் வாகனம் மீது தாக்குதல்!

### ஆத்திரமடைந்த கும்பல் கைவரிசை

கொழும்பு, ஜன. 26

பௌத்த சாசன, கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக் கொடி நேற்று கண்டிக்குச் சென்றபோது ஆத்திரமடைந்த கும்பல் ஒன்றினால் அவரது வாகனம் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாகனம் தாக்கப்பட்டதும் அவர் இறங்கி தலதாமாளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. முகாம் தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோருகின்றனர்!

வவுனியா, ஜன. 26

கடந்த வெள்ளிக்கிழமை புங்குடுதீவில் ஈ.பி.டி.பி. முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் உரிமை கோரி உள்ளனர்.

அதிகாலை 1.09 மணி அளவில் விடு தலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என வும் —

ஐந்து நிமிடங்கள் வரை நடைபெற்ற இந்தச் சண்டையின் பின் ஈ.பி.டி.பியின் முகாம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு புலிகளினால் தீயிட்டு அழிக்கப்பட்டதாகவும் — புலிகள் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை ஈ.பி.டி.பியினர் படையினருக்கு வழங்கிவந்தனர் என்றும்—

படையினருடன் இணைந்து பொது மக்கள் [illegible]

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 26

கண்டி தலதாமாளிகையில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கு விடுதலைப்புலிகளே காரணம் என்று அரசாங் கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆனால் புலிகள் தரப்பில் இருந்து எதுவித கருத்தும் வெளியிடப்படவில்லை என்று ஏஜென்ஸி செய்திகள் தெரி வித்தன.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கில் ஜே.வி.பி காலப்பகுதியில்

# காணாமற் போனோர் தொடர்பாக அதிகாரிகள் மீது விரைவில் வழக்கு

கொழும்பு. ஜன. 26

1988 - 89 காலப்பகுதியில் தென்பகுதிகளில் ஆள்கள் காணாமற் போன சம்பவங்களுக்குப் பொறுப்பான இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகள் மீது அரசு வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது.

ஆள்கள் காணாமற் போன சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் விசாரணை அறிக்கைகளை ஜனாதிபதியிடம் கையளித்ததைத் தொடர்ந்தே அரசு இவ்வாறு முடிவெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென் மாகாணத்தில் ஆள்கள் காணாமற்போன சம்பவங்களுக்குப் பொறுப்பான பொலீஸ் அதிகாரிகள் மீது முதலில் வழக்குகள் தாக்கல் செய்ய படவுள்ளன. இச்சம்பவங்களில் பொலீஸ் உயர் அதிகாரிகள் மற்றும் பல்வேறு தரங்களைச் சேர்ந்த பொலீஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 300 பேர் தொடர்பு கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதியில் வன்முறைகள் தலைவிரித்தாடிய போது இடம்பெற்ற மனித படுகொலைகள் மற்றும் ஆள்கள் காணாமற் போன சம்பவங்கள்குறித்து விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி 3 ஆணைக்குழுக்களை நியமித்திருந்தார். ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் குறித்து விசாரணை மேற்கொண்ட இந்த ஆணைக்குழுக்கள் இடம் பெற்ற சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களின் பட்டியலை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்ட பொலீஸ் அதிகாரிகள் தற்போதும் சம்பந்தப்பட்ட இடங்களில் தொடர்ந்தும் பணியாற்றினால் அவர்களை உடனடியாக வேறு இடங்களுக்கு மாற்றும்படி ஆணைக்குழு சிபாரிசு செய்துள்ளது.

ஜே.வி.பி கலவரகாலத்தில் வடமேல் மாகாணத்தில் கடமையாற்றிய உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரைக் கட்டாய லீவில் அனுப்புமாறும் ஆணைக்குழு சிபாரிசு செய்துள்ளது.

எவ்வாறாயினும் ஆள்கள் காணாமற்போன சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதும் அவர்கள் அனைவரையும் வேலையிலிருந்து நீக்குவது என அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

அடுத்த வாரத்தில் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாகவும் ஆணைக்குழுக்கள் தமது அறிக்கைகளில் சிபாரிசு செய்துள்ளன. (ஐ-10)

# பிரதி அமைச்சர்கள் பதவிக்கு பலருடைய பெயர்கள்

கொழும்பு, ஜன. 26

தற்போது வெற்றிடமாகவுள்ள பிரதி அமைச்சர் பதவிகளுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழஹப்பெரும, டிலான் பெரேரா, உபாலி குணவர்த்தன, ஜகத் பாலசூரியா ஆகியோரின் பெயர்கள் அடிபடுவதாகக் கூறப்படுகிறது.

தற்போது 5 பிரதி அமைச்சர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன. இந்த வெற்றிடங்களை ஒன்பது ஆக்குவதற்கு அரசு ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதித் தொழில் அமைச்சரான ஜனக பண்டார தென்னகோன் பிரதி அமைச்சர் பதவியை ராஜினாமா செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. சத்திர சிகிச்சைக்கு உட்பட்டு அமெரிக்காவில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வரும் இவரின் உடல் நிலையில் எதுவித முன்னேற்றமும் இல்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

# களுத்துறைத் தமிழ் கைதிகள் போராட்டத்துக்கு ஆதரவு

## ரெலோ அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 26

களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகள் ஆரம்பிக்கவிருக்கும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு தமது ஆதரவை வழங்குவதாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளின்காவலில் இருக்கும் ஆள்கள் சம்பந்தமாக புதிய அவசர கால விதிகளை அரசு அறிவித்துள்ளது.

அந்த விதிகள் ஜனநாயக விரோதத் தன்மை கொண்டவை: துஷ்பிரயோகம் செய்யக் கூடியவை.

அந்த விதிகளை உடன் வாபஸ் பெறுமாறு ஜனாதிபதியைக் கேட்டிருந்தோம். ஆனால், அவை இன்னமும் வாபஸ் பெறப்படவில்லை.

இந்த விதிகள் வாபஸ் பெறும் வரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப் போவதாக களுத்துறை சிறைத் தமிழ்க் கைதிகள் அறிவித்துள்ளனர். இதற்கு எமது அமைப்பு பூரண ஆதரவு வழங்கவிருக்கிறது.

சகல சிறைச்சாலைகளிலும் வாடும் தமிழ்க் கைதிகளின் ஜனநாயக உரிமைக்கான போராட்டத்துக்கு எமது ஆதரவு என்றும் உண்டு.

இப்படி அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-3)

## திணைக்களத் தலைவர்கள் மாநாடு

யாழ்ப்பாணம், ஜன 26

திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேச செயலர்களுக்கான தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பான மாநாடு ஒன்று இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சகலரையும் அதில் கலந்து கொண்டு ஒத்துழைக்குமாறு யாழ். மாவட்ட தெரிவு அத்தாட்சி அலுவலரும், தேர்தல் நடவடிக்கைகளுக்குப்பொறுப்பான சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியும் கோரியுள்ளனர். (ஐ)

## நிலக்கண்ணி மீட்பு

மாங்குளத்துக்கு வடகிழக்கே மருதங்குளம் பிரதேசத்தில் தேடுதல் நடத்திய படையினர் பெருமளவு நிலக்கண்ணிகளைக் கண்டெடுத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. (இ-9)

## அகதிகள் தொடர்ந்து வருகை

குருநகர், ஜன. 26

வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக வள்ளங்களில் குருநகர் இறங்குதுறைக்கு அகதிகள் தொடர்ந்து வருகிறார்கள்.

கடந்த புதன்கிழமை 10 பேரும், வியாழக்கிழமை 37 பேரும், வெள்ளிக்கிழமை 8 பேரும், சனிக்கிழமை 23 பேரும் குருநகர் வந்தடைந்தனர்.

இவர்கள் குருநகர், பாஷையூர், கொக்குவில், தாளையடி, சண்டிலிப்பாய், பருத்தித்துறை ஆகியஇடங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். (ஐ-51)

## மண்டபம் திறப்பு

தென்மராட்சி, ஜன. 26

பளை பெரியபளைப் பகுதியில் புதிய பாலர் பாடசாலை மண்டபம் இப் பகுதி மக்களால் நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ஐ-117)


லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில் காண்பிக்கப்படுகிறது

அஜித்குமார் தேவயானி நடித்த

'காதல் கோட்டை'

[illegible] 9 - 3 [illegible] 30 [illegible] 30

(52705)


## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் தவமணி

கொழும்புத்துறை இல. 6, 2 ஆம் குறுக்குத்தெருவைச்சேர்ந்த ஆறுமுகம் - தவமணி 25 - 1 - 98 இல் காலமாகி விட்டார்.

அன்னார் சின்னத்துரை ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மா. தம்பிப்பிள்ளை-பொன்னு தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை சின்னம்மாவின் அன்புமருமகளும், சரஸ்வதி (வேணி), சண்முகானந்தன் (ஜேர்மனி), சண்முகதாஸ் (பிரான்ஸ்), புவனேந்திரநாதன் (ஜேர்மனி), திருலோகநாயகி (ஜேர்மனி), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), சிவாஜினி ஆகியோரின் அன்புத்தாயாரும், சரவணபகவான் (ஜேர்மனி), சாந்தமலர் (ஜேர்மனி), இராஜேஸ்வரி (பிரான்ஸ்), வாசுகி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமியாரும் ச. மனோகாந், ச. கார்த்திகா, ச. புஸ்பகாந், ச. சுகுமார், ச. சுரேகா, ச. சுகனியா, ச. திவ்வியா, ச. சரவணன், பு செவின், பு. புவிநிதா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (26-1-98) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு தகனக் கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சரவணபகவான்- சரஸ்வதி (மகள்)
இல. 6, 2 ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை
(52903)

### பூதத்தம்பி வீரசிங்கம்

(முன்னாள் தபால் அத்தியட்சகர், S.O.)

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த பூதத்தம்பி வீரசிங்கம் காலமானார்.

இவர் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதி தியாகராசா (அமெரிக்கா), திரு. கிருஷ்ணகுமார் (சுவிஸ்), திருமதி மகாதேவா (ஜேர்மனி) மனோரஞ்சனிதேவி, திரு. தயாளகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ரமணன், ராகவன், நிசாந்தன், நிரோஷன், அபர்ணா ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி முத்துப்பிள்ளை, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், திரு. பூ. நித்தியானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பூதத்தம்பி, அபிராமிப்பிள்ளை, சோதிப்பிள்ளை, தில்லைநாதர், சதாசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும் இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி வீ. தெய்வானைப்பிள்ளை (மனைவி)
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
(52904)

### மனுவற்பிள்ளை ஜோசப்

கரம்பனைப பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் சுண்டுக்குளி குருசோவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவற்பிள்ளை ஜோசப் 25-01-98 இல் இறைவனடி சேர்ந்தார்.

இவர் மேரிமாகிறேட்டின் அன்புக் கணவரும், மேரி ஜேட்ரூட் பியற்றிஸ் (யாழ். போதனா வைத்திய சாலை), ஜோசப்கிறிஸ்ரி அல்பிறட் (புவனம்), மேரி யசிந்தா (நிர்மலா கனடா), ஆகியோரின் தந்தையாரும். இராஜதுரை, அன்ரனிற்ரோ (கனடா), மேரி ஜெசிந்தா ஆகியோரின் மாமனாரும், ஜெயகாந்தன் (யாழ் பல்கலைக்கழகம்), அரவிந்தன், ஆதித்தன், (புனித பத்திரிசியார் கல்லூரி), ஆர்த்திக் (கனடா), கவாஸ்கர் (கனடா), வருணா (திரு. க. மடம்) ஆகியோரின் பேரனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இன்று (26-01-98) திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் புனித கொஞ் சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மேரிஜேட்ரூட் பியற்றிஸ் (மகள்)
இல. 5, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.
(52899)

## மரண அறிவித்தல்

### திருமதி அமிர்தவல்லி இரவீந்திரன்

(ஆசிரியை, யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமிர்தவல்லி இரவீந்திரன் 23 01-98 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் R K இரவீந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (தர்மகர்த்தா, பசுபதீஸ்வரர் தேவஸ்தானம், பருத்தித்துறை), காலஞ்சென்ற தில்லைநாயகி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான R S. குமாரசுவாமி (முன்னாள் ஆசிரியர், பரமேஸ்வராக் கல்லூரி). திருமதி ஹம்சதேவி, Dr. ராணிதேவி தம்பி (London) ஆகியோரின் மருமகளும், சுந்தரவல்லி, கலாவாணி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், சாருஜன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), வியாஷன், (சிந்மய பாரதி வித்தியாலயம், சுதுமலை), தனஜி (சிந்மய பாரதி வித்தியாலயம், சுதுமலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், T. நாகராஜா (தர்மகர்த்தா, பசுபதீஸ்வரர் தேவஸ்தானம், பருத்தித்துறை), G. சுரேந்திரன் (பிரான்ஸ்), R K. ஜெயக்குமார் (U S A), தாரணி (London), தக்ஷாயினி (London) ஆகியோரின் மைத்துனியும், தாரணி (பிரான்ஸ்), தர்ஷினி, சாந்தரூபன், வரீஷினி, சுவந்தினி, சுபோதினி (பிரான்ஸ்), காயத்திரி (U S A.) ஆகியோரின் சிறிய தாயாரும், ஆனந்த கிருஷாந் (London), சுவேதா (London), சஜன்லவன் (London) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-01-98 திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் No: 115, A F Raymonds மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கனத்தை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
R.K. இரவீந்திரன்
30 W.A. சில்வா மாவத்தை,
கொழும்பு - 6.

ஆ. திருச்செல்வம்
அதிகாரி வளவு,
ஆனைக்கோட்டை.

(கி- 2752)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெள்ளை மாளிகை பாலியல் துஷ்பிரயோகம்

# கிளின்ரனின் அரசியல் எதிர்காலத்துக்கு பாதிப்பு!

வாஷிங்டன், ஜன. 26

**அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் மீது கடைசியாகச் சுமத்தப்பட்டிருக்கும் பாலியல் துர்நடத்தை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அவரது அரசியல் எதிர்காலத்தை நெருக்கடிக்குள் இட்டுச் செல்வதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.**



வெள்ளை மாளிகையில் உதவியாளராகப் பணிபுரிந்த மொனிக்கா லிவின்ஸ்கி (MONICA LEWINSKY) என்ற 20 வயதுப் பெண்ணுடன் கிளின்ரன் உடலுறவில் ஈடுபட்டார் என்றும், பின்னர் அது பற்றி பொய் சொல்லுமாறு அவரிடம் கூறினார் என்றும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அந்தக் குற்றச் சாட்டுக்களில் இருந்து அதிபர் கிளின்ரன் தன்னை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது தொடர்பாக அவரது சட்ட நிபுணர்கள் குழுவினர் தீவிரமாக ஆலோசித்து வந்தனர்.

ஆனால் இது விடயத்தில் சட்ட நிபுணர்கள் குழுவில் பிளவு ஏற்பட்டிருப்பதாக வாஷிங்டனில் இருந்து வெளியான தகவல்கள் தெரிவித்தன.

சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளில் இருந்து அதிபரை பாதுகாப்பது தொடர்பான முடிவை எடுப்பதற்கு மேலும் தகவல்கள் கிடைக்கும் வரை காத்திருப்பது என சட்ட நிபுணர்களில் ஒரு சாரார் கருதுவதாகவும்—

இந்த விவகாரம் தொடர்பாக நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அமைதியின்மையை, தெளிவின்மையை நீக்க விரைவிலேயே அவர்களுக்கு பதிலளித்து விட வேண்டும் என மறு சாரார் வலியுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிபரின் சட்ட நிபுணர் குழுவினரிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாட்டை நீக்கி இணக்கத்தை ஏற்படுத்த தீவிரமான முயற்சிகள் வாஷிங்டனில் நேற்று நடந்து கொண்டிருந்தன.

தம் மீதான குற்றச்சாட்டுக்களை அதிபர் கிளின்ரன் மறுத்துள்ளார். எனினும் பாலியல் ரீதியான குற்றச் சாட்டுகளுக்கு அடிக்கடி ஆளாகிவரும் கிளின்ரனின் அரசியல் எதிர்காலம் நெருக்கடியான கட்டத்தை அடைந்திருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பவுலா ஜோன்ஸ் என்ற பெண்ணுடன் பாலியல் ரீதியான துர் நடத்தையில் ஈடுபட்டதாக ஏற்கனவே சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் அதிபர் கிளின்ரன் மீது நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இதேவேளை — தமது கணவர் மீதான பாலியல் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று திருமதி ஹிலாரி கிளின்ரன் கூறியுள்ளார்.

கடந்த ஐந்து ஆறு வருடங்களாகவே தமது கணவரின் அரசியல் எதிர்காலத்தை சீர் குலைக்கும் வகையில் பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும், இந்தக் குற்றச் சாட்டும் அவ்வாறான அரசியல் நோக்கம் கொண்டதே என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (ஐ)

# கவனத்தைதிசைதிருப்ப ஈராக் மீது தாக்குதல்?

## எதிர்கொள்ள பக்தாத் தயார்!!

பக்தாத், ஜன. 26

வெள்ளை மாளிகை பாலியல் விவகாரம் தொடர்பாக அதிபர் கிளின்ரன் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களால் எழுந்துள்ள நெருக்கடியில் இருந்து கவனத்தை திசை திருப்புவதற்காக ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தக் கூடும் என பக்தாதில் எதிர்பார்க்கப் படுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. பக்தாத் பத்திரிகைகள் இது தொடர்பாக செய்திகளை வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் தாக்குதல் ஒன்றை எதிர்கொள்வதற்கான முன் ஆயத்தப் பணிகளில் பக்தாத் அதிகாரிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். சுயவிருப்பத்தின் பேரில் இளைஞர் யுவதிகளை ஆயுதப் படை ஒன்றில் இணைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுமார் 10 லட்சம் பேர் இவ்வாறு படையில் சேர முன் வந்துள்ளதாக ஈராக்கின் உத்தியோகப்பூர்வ செய்தி நிறுவனம் தெரிவித்தது.

அதிபர் சதாம் ஹுசேய்ன் கலந்துகொண்ட அமைச்சரவைக் கூட்டத்தில் அமெரிக்கத் தாக்குதலை எதிர்கொள்வது பற்றி ஆராயப்பட்டுள்ளது. (ஐ)

## பிரான்ஸ் ஜனாதிபதி இந்தியாவில்

புதுடில்லி, ஜன. 26

பிரெஞ்சு அதிபர் யக் சிராக் இந்தியாவில் மூன்று நாள் விஜயம் மேற் கொண்டுள்ளார்.

அடுத்த நூற்றாண்டின் பெரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா நிச்சயம் வரும் என்று அவர் கூறியுள்ளார் தென் கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி நிலைமை ஆசிய நாடுகளுடன் பிரான்ஸ் கொண்டுள்ள தொடர்புகளைப் பாதிக்கப்படமாட்டா என்றும் அதிபர் சிராக் தெரிவித்தார். (ஐ)

உலக அரங்கில்

## இலங்கைப் பெண்ணுக்கு கசையடி

அபுதாபி, ஜன. 26

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் பணிப்பெண்ணாக வேலை பார்த்த இலங்கைப் பெண் ஒருவருக்கு 120 கசை அடியும், இருவருட சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளன.

பங்களாதேஷ் நாட்டவரான தனது காதலருடன் சட்டவிரோதமாக உடலுறவு கொண்டு கர்ப்பம் தரித்த குற்றத்திற்காக இஸ்லாமிய நீதிமன்றம் இத்தீர்ப்பினை வழங்கியது. மேற்படி பங்களாதேஷ் பிரஜை தன் மீதான குற்றச்சாட்டை மறுத்ததை அடுத்து அவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனையும், 95 கசையடிகளும் வழங்கப்பட்டன. (ஐ)

## ஏழைகளுக்கு உதவிடவே சே- குவரா விரும்பினார்

### புனித பாப்பரசர் தெரிவிப்பு

ஹவானா, ஜன. 26

"மார்க்ஸிஸ்ட் கெரில்லாவான ஏர்னெஸ்ரோ சே குவரா ஆண்டவரால் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பார். ஆனால் அவர் ஏழைகளுக்கு உதவவேண்டும் என நிச்சயமாக விரும்பினார்".

புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். கியூபாவுக்கான தனது ஐந்து நாள் விஜயத்தை ஆரம்பித்து கடந்த புதனன்று அங்கு பயணமாகிக் கொண்டிருந்த சமயம் விமானத்தில் வைத்து செய்தியாளர்களுடன் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"அவர் (சே. குவரா) ஆண்டவனின் நியாய சபையை எதிர்கொண்டே ஆகவேண்டும். ஆனால் அவர் ஏழைகளைப் பாதுகாக்க விரும்பினார் என நான் நிச்சயமாகச் சொல்வேன்" என்று பாப்பரசர் கூறியதாக 'ரமயிட்டர்' செய்தி வெளியிட்டுள்ளது.

லத்தீன் அமெரிக்காவின் புகழ் பெற்ற கெரில்லா வீரரான சே. குவராவின் உடல் அவர் கொல்லப்பட்டு 30 ஆண்டுகளின் பின் அண்மையில் கியூபா கொண்டு செல்லப்பட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்டது தெரிந்ததே. (ஐ)

## தெரேஸாவைப் போன்று சோனியாவும் இந்தியரே!

### காங்கிரஸ் கட்சி பிரசாரம்

புதுடில்லி, ஜன. 26

அன்னை தெரேஸாவைப் போலவே சோனியாகாந்தியும் இந்தியரே என்ற சாரப்பட காங்கிரஸ் கட்சியினர் தற்போது பிரசாரம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சோனியா அந்நிய தேசத்தவர் என்று எதிர்க்கட்சிகள் செய்துவரும் பிரசாரத்தை முறியடிக்க இவ்வாறு காங்கிரஸ் கட்சி மறு பிரசாரம் செய்து வருகிறது.

சோனியாவின் புகழ் பாடும் சுமார் 3 லட்சம் ஒலி நாடாக்களை காங்கிரஸ் கட்சி இந்தியா முழுவதும் வெளியிட்டுள்ளது.

அன்னை தெரேஸாவை எவ்வாறு ஓர் இந்தியர் என ஏற்றுக்கொள்வதில் இந்தியர்கள் பெருமைப்படுகிறார்களோ அது போன்றே சோனியாவும் உள்ளார் என்ற கருத்தில் பாடல்கள் அந்த ஒலி நாடாவில் வெளிவந்துள்ளன.

இத்தாலி நாட்டவரான சோனியா பொதுத் தேர்தலுக்காக காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். (ஐ)

## இனப்பிரச்சினை தீர்வு யோசனை:

# ஐ.தே.கவுக்கு வழங்கப்பட்ட காலக்கெடுவை நீடிக்கமுடிவு

யாழ்ப்பாணம், ஜன. 26

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மாற்று யோசனை தெரிவிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசினால் வழங்கப்பட்ட காலக்கெடு மேலும் நீடிக்கப் பட்டுள்ளது.

இம்மாதம் 31 ஆம் திகதி வரை காலக்கெடு விதிக்கப் பட்டிருந்தது தெரிந்ததே.

இந்தத் திகதிக்குள் மாற்று யோசனை அல்லது அரசு தெரிவித்திருந்த யோசனைகளுக்கு திருத்த யோசனைகளை தெரிவிக்க ஐக்கிய தேசியக் கட்சி தவறினால் அரசாங்கம் தனது யோசனைகளை அமுல் செய்ய முயற்சிக்கும் என்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்திருந்தார்.

தற்பொழுது இந்தக் காலக்கெடு நீடிக்கப்படுவதாக அமைச்சர் டி. எம். ஜயரத்ன கருத்து வெளியிட்டுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பாக தனது யோசனைகளைத் தெரிவிப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி ஏற்கனவே 6 மாதங்கள் கேட்டிருந்தது தெரிந்ததே.

இதேவேளை மாற்று யோசனைகள் குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில்விக்கிரம சிங்க கடந்த 21 ஆம் திகதி கொழும்பில் தமது கட்சியின் பிரதிநிதிகளுடன் கூட்டம் ஒன்றை நடத்தி இருந்தார். (இ-7)

## காய்ச்சலால் இளம் பெண் மரணம்

தென்மராட்சி, ஜன. 26

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண் கடந்த வெள்ளியன்று மரணமானார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த நவரத்தினம் பவானி (வயது 35) என்னும் இரு பிள்ளைகளின் தாயாரே மரணமானவராவார். (இ-17)

## யாழ்ப்பாணத்தில்

# தொழில் நீதிமன்றங்கள் அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 26

"யாழ்ப்பாணத்தில் தொழில் நீதி மன்றங்கள் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" மேற்கண்டவாறு உதவித் தொழில் ஆணையாளர் ஆ. பசுபதி வலியுறுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் பணிக்கொடைகள், நஷ்டஈடு ஆகியவற்றைப் பெறுவதற்கு தொழில் நீதி மன்றங்கள் அவசியமானவை என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சில தொழிலாளர் பிரச்சினைகள் மாவட்ட தொழில் திணைக்களத்தினால் கைத்தொழில் பிணக்குச் சட்டத்தின் கீழ் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (இ-5)

# தாவடிச் சம்பவம் குறித்து படைத்தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 26

கடந்த 20 ஆம் திகதி ஊரடங்கு அமுலில் இருந்த சமயம் தாவடிப் பகுதியில் நடமாடிய மூவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது, அவர்கள் வீடுகளில் பொருள்களை சூறையாடியமை தெரியவந்ததாக பலாலி இராணுவ தலைமையகச் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது

இரவு நேரம் சைக்கிளில் சென்ற மூவரை மறித்த சமயம் அவர்கள் நிற்காமல் சென்ற போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது. அதில் ஒருவர் இறந்தார்; மற்றவர் காயத்துடன் கைது செய்யப்பட்டார்; மூன்றாம் நபர் தப்பி விட்டார்.

காயமடைந்த நபரை விசாரித்ததில் வீடுகளில் களவு எடுத்ததை அவர் ஒப்புக் கொண்டார்.

அவர்களிடம் இருந்து எட்டு கைக்கடிகாரங்கள், ஒரு மேசை மணிக்கூடு, இரு சைக்கிள்கள் ஆகியவற்றைப் படையினர் கைப்பற்றினர்.

இவ்வாறு அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 கோடி வெளிநாட்டுக் கடிதங்கள் கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன

## இரவு நேர தரம் பிரிக்கும் பணி நடைபெறுவதில்லை

கொழும்பு, ஜன. 26

கடிதங்களைத் தரம் பிரிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக கொழும்பு தபால் பரிவர்த்தனை நிலையத்தில் சுமார் 2 கோடி வெளிநாட்டுக் கடிதங்கள் விநியோகிக்கப்படாமல் தேங்கிக்கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டுக் கடிதங்களைத் தரம்பிரிக்கும் பிரிவை புதிய நிலையத்திற்கு இடம் மாற்றியதை அடுத்தே இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது எனவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக இரவில் தரம்பிரிக்கும் பணி நடைபெறுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிருந்து வெளிநாடுகளுக்கு முகவரியிடப்பட்ட லட்சக் கணக்கான கடிதங்களும் தரம்பிரிக்கப்படாமல் தேங்கிக்கிடக்கின்றன. இரவு நேர தரம்பிரிக்கும் பணிமீண்டும் ஆரம்பிக்கப்படாவிடின் கடிதங்கள் தரம்பிரிக்க முடியாத அளவிற்கு மேலும் தேங்க வாய்ப்புக்கள் உள்ளன என ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது 22 ஆயிரம் பொதிகளில் வெளிநாட்டுக் கடிதங்கள் தேங்கிக்கிடக்கின்றன.

(ஐ-7-10)


## குருபரன் கல்வி நிறுவனம்
### புத்தூர்

இக் கல்வி நிறுவனத்தில் பயின்று
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
மாணவர்கள்:

இ. கோகுல்நாத் 149 புள்ளி
(யாழ். மாவட்டம் 2 ஆம் இடம்)
ஜெ. சேந்தன், தி. கல்பனா, மா. வானதி,
அ. சங்கீதா, ந. தவலோஜினி

இவர்களையும் இவர்களை ஊக்குவித்த சகல ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

இயக்குநர்,
ஆசிரியர்கள்.

[52896]



## மனமாரப் பாராட்டுகின்றோம்

யா/வல்வெட்டித்துறை
விநாயகர் வித்தியாலயத்தில்
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி
பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்துள்ள
மாணவர்கள்.

1. சிதம்பரப்பிள்ளை – கருதிலயன்
2. தெட்சணாமூர்த்தி – சுதாகரன்
3. தருமகுலசிங்கம் – சரணியா
4. கதிர்காமநாதன் – டர்சினி
5. சின்னராசா – காயத்திரி

ஆகிய ஐந்து மாணவர்களையும், அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர் திரு. க. தருமகுலசிங்கம், துணைநின்ற ஆசிரியர்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டுவதில் பெருமை கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பாடசாலைப் பழைய மாணவர்கள்.

[52883]


## ரெலோவின் இறுதிக் கூட்டம் பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், ஜன. 26

ரெலோ இயக்கத்தினரின் இறுதித்தேர்தல் பிரசாரக்கூட்டம் இன்று மாலை 5மணிக்கு பருத்தித்துறையில் இடம்பெற உள்ளது.

ரெலோ இயக்க முதல்வர் எம்.கே. சிவாஜிலிங்கம் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்.

இன்று காலை 10 மணிக்கு யாழ். மத்திய பஸ் நிலையத்திலும், நண்பகல் 1 மணிக்கு வல்வெட்டித்துறையிலும், 3 மணிக்கு நெல்லியடியிலும், 5 மணிக்கு பருத்தித்துறையிலும் கூட்டங்கள் நடைபெற உள்ளன.

இக்கட்சி கடந்த சில நாள்களாக வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது. இன்று அரியாலை, குருநகர்ப் பகுதிகளில் பிரசாரக் கூட்டங்களை நடத்த உள்ளது.

(இ-9)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ். வட்ட லியோ கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பாஷையூர் சென் அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விபரம் வருமாறு:-

★ பிற்பகல் 3. 30 மணி— றோயல் வி. க. அணி எதிர் சென். நிக்கலஸ் வி.க. அணி.

★ பிற்பகல் 4. 45 மணி— குருநகர் பாடும்மீன் அணி எதிர் பாஷையூர் சென். அன்ரனீஸ் அணி.

(ஐ)

★ ★ ★

வதிரி தமிழ் மன்றத்தின் வைர விழா உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இறுதி ஆட்டத்தில் வதிரி மனோகரா வி.க அணியை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக்கழக அணி மோதும்.

இறுதியாட்டத்தை ஒட்டி நடைபெறும் காட்சி உதைபந்தாட்டத்தில் வதிரி டயமட் வி.க அணியும் உடுப்பிட்டி ஐக்கிய வி.க. அணியும் மோதவுள்ளன.

(ஐ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 13 04–1944
மறைவு: 27–12–1997

### அமரர் சின்னத்தம்பி குணசேகரம் (யோகர்)

எங்கள் பாசமிகு குடும்பத் தலைவனாய் அன்பின் திருவுருவுமாய் வாழ்ந்து எங்களுக்கு நல் வாழ்வளித்த வழிகாட்டியே! எங்களுக்காகவே வாழ்ந்து எங்களுக்காகவே பிரார்த்தித்து எங்கள் நினைவுடனே இயற்கை எய்திய நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஒரு மாதமாகியும் உங்கள் திருவுருவம், பாசம், நினைவுகள் என்றென்றும் எங்கள் மனதில் நீங்காது நிற்கும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,

நித்தான்இலுப்பை,
பழைய வீதி,
இருபாலை.

(52894)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 27 — 02 — 1910
உதிர்வு: 27 — 12 — 1997

### அமரர் சின்னத்தம்பி விஸ்வலிங்கம்

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், பாசத்தின் இருப்பிடமாய், பண்பின் திருவுருவாய் வாழ்ந்து எம்மை அன்புடன் அரவணைத்து இன்புற வாழ வைத்த தெய்வமே! உம் நினைவுகளை நம் கண்ணீர் அஞ்சலிப் பூக்களாய் உங்கள் காலடிக்குச் சொரிகின்றோம்.

26 - 01 - 98 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(52793)



## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 02 — 10 — 1912
உதிர்வு: 06 — 02 — 1997

### திருமதி கந்தையா வள்ளியம்மை
மீசாலை

திதி: 26 – 01 – 1998

பண்பின் உறைவிடமாய் பாசத்துடன் எமை வளர்த்து ஆளாக்கிய தாயே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு என்றும் அகலாது அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

(52829)



உங்கள் வாக்கு எங்களுக்கு!
எங்கள் சேவை உங்களுக்கு!!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



X

[ஏ0028]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் - 1998



அஹிம்சாமூர்த்தி
தந்தை செல்வா



தலைவர் அ. அமிர்தலிங்கம்

**தந்தை செல்வா வழியில்**
**தலைவர் சிவசிதம்பரம் அவர்களின்**
**தலைமையைப் பலப்படுத்தி தமிழினம் உயர்ந்திட**

## உதயசூரியனுக்கே
## வாக்களியுங்கள்!



யாழ். மாநகர
முதன்மை வேட்பாளர்
திருமதி
சரோஜினி யோகேஸ்வரன்



தலைவர் மு. சிவசிதம்பரம்



வலி- வடக்கு பிரதேச சபை
முதன்மை வேட்பாளர்
திரு. சு. ஸ்ரீபாஸ்கரன்

# தமிழர் விடுதலைக் கூட்டணி

X

(ஏ-04)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கோல்ஸ்ரார் B/W T. V, இந்திய சுருதிப்பெட்டி, நட்டு வாங்கதாளம், கால்சலங்கை. தபேலா, மூட்டு. சுருதிப் பெட்டி றீட்ஸ் விற்பனைக் குண்டு. மற்றும் ஸ்பீக்கர், யூனிற்டயபுரம், ரான்சோமர், பற்றிச்சார்ச்சர் ஒருவருட உத்தரவாதத்துடன் றிவைண்டிங் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: மினி மகாலிங்கம், 958/47, கே கே.எஸ்.றோட், நாச்சிமார் கோயிலடி. [52890]

உடுவில் மல்வம் ஞான வைரவர் கோயிலுக்கு தெற்குப் பக்கமாக உள்ள ஒன்பது பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இ. நாகேஸ்வரசர்மா, முத்துத்தம்பி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். [49920]

''கிறிவ்ஸ் வில்லியம'' ஜெனரேட்டர் (600w) விற்பனைக்குண்டு. தொடர்பு: K. செல்வராஜா, ''தனபதி இல்லம்'' ஆடியபாதம் வீதி, கெபக்குவில் மேற்கு, கொக்குவில். [49925]

## தவறிவிட்டது

சங்கிலித் தாலிக்கொடி (9 பவுண்) ஒன்று யாழ். ஆஸ்பத்திரியில் அல்லது யாழ். பஸ்நிலையத்தில் இருந்து புன்னாலைக்கட்டுவன் செல்லும் தனியார் பஸ்களில் 23-1-98 (வெள்ளி) அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கந்தையா கேதீஸ்வர நாதன், சிமெந்து கூட்டுத்தாபன விற்பனைப் பகுதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம், என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [52876]

சுகந்தி சுவாமிநாதன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (707230703V) விசேட அடையாள அட்டையும் (091002684), பல்கலைக்கழக அடையாள அட்டையும் கச்சேரிக்கும், யாழ் நகருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வாமாஸ்மதுபான சாலை, மின்சாரநிலையவீதியில் ஒப்படைக்கவும். [52885]

சுப்பிரமணியம் மஞ்சுளா ரவிமதி கோப்பாய் தெற்கு கோப்பாய் என்ற முகவரியை உடைய தேசிய அடையாள அட்டை யாழ். நகருக்கும், கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பேபி ஸ்ருடியோ, பலாலிறோட், கந்தர்மடம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [52891]

## திருமண சேவை

ஆண், பெண் இருபாலரது சாதகக் குறிப்பு பொருத்தம் பார்த்து திருமணம் நிச்சயித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: இ. சரவணபவானந்தம் (மதி திருமண சேவை) அராலி தெற்கு, அராலி. [52861]

## நூல்கள்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் நீங்கள் அடிக்கடி வானொலியில் கேட்கும் நாடகங்களை எழுதுகின்ற அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதியது. வீரகேசரியில் பிரசுரமாகி உலகம் முழுவதும் உள்ள தமிழர்களால் வாசிக்கப்பட்டது. எங்கும் கிடைக்கும். [52528]

# பாலர் ஆசிரியர் பயிற்சி

கைசித் தகைமை க. பொ. த (சா/த). தபால் வழியில், ஆறு மாதத்தில் பயிலலாம், பாலர் ஆசிரியர் சங்கம் 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (52881)

# அஸ்ரன் வெளியீடு

**G C E A/L-1997**

அனைத்துப் பாடங்களும் 5 வருடம் வெளிவந்து விட்டது!

தொடர்பு:
ரி. லோகநாதன்,
75, சிவன்பண்ணைவீதி,
கொட்டடி.
[52848]

# ஓராண்டு நினைவலைகள்

''இலங்கை இந்து மத குருபீடாதிபதி''
''சிவாகமஞானி'' ''சிவாச்சார்யஇம்மம்''
''மாந்திரீக பூஷணம்''

கலாநிதி

## சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவசிவாச்சார்யார்

யாழ். நயன்மார்கட்டு

உதயம்: 22 – 07 – 1922



அஸ்தமனம்: 06 – 02 – 1997

ஆப்தீக சிரார்த்த திதி: 26 - 01 - 98 திரயோதசி

ஓராண்டு சென்றதையா ஓயவில்லை எம் கவலை.
யாரை அப்பா என்றழைத்திடவே நீங்களில்லை
பாரினில் யாரை அப்பா என்று அழைப்போம் இனி?

அன்னாரின் ஆத்மா சாந்திபெற நாயன்மார் கட்டு ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மருமகன், மகள்,
சிவஸ்ரீ சிவ. நித்தியானந்தக்குருக்கள்,
சங்கானை.
(52847)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி அமுதா ரவீந்திரன்

(ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி)

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயரில்:
டாக்டர் சோமசுந்தரம் குடும்பம் (நல்லூர்)
டாக்டர் ஞானசம்பந்தர் குடும்பம் (சாவகச்சேரி)
தம்பிஐயா குடும்பம் (நல்லூர்)
இராமலிங்கம் குடும்பம் (நல்லூர்)
டாக்டர் சே. சுந்தரராஜன் குடும்பம் (நவாலி)
(52888)

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## தம்பிநாயகம் றொபேட் தவநாயகம்

முன்னாள் உத்தியோகத்தர்
(இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)

மலர்வு: 17 – 09 – 1951
உதிர்வு: 26 – 01 – 1997

''சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது'' சங்கீதம் 34: 10

என்றும் நினைவு கூரும்,
மனைவி, பிள்ளைகள், தாய்,
சகோதரன், சகோதரிகள்.
தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.
(52750)


# Gestetner



கொப்பியர்



ஃபக்ஸ் இயந்திரம்



தட்டச்சு இயந்திரம்

100 ஆண்டுகளுககும் மேலாக அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்களை உற்பத்தி செய்வதில் முன்னணி வகிப்பவர்கள்.

**விற்பனைக்குப் பின்னரான சேவையும் வழங்கப்படும்.**

தொலைபேசி இலக்கங்கள்: 327516, 336779, 323826, 323827, 436044.
ஃபக்ஸ்: 541351
விற்பனைக்குப் பின்னரான சேவையைப் பெற்றுக் கொள்வதற்குத் தொடர்பு கொள்ளுங்கள்: 431535, 332976.

கிளைகள்: டி. எஸ். சேனநாயக்க வீதி, கண்டி. தொலைபேசி: 08-234230
7 2/2 எஃப். பி.ஜீ.எம் கட்டிடம், பழைய சந்தை வீதி, கொட்டுவேகொட, மாத்தறை. தொலைபேசி: 041-234229

கெஸ்டெட்னர் ஒஃவ் சிலோன் லிமிட்டெட்
188, 192 வொக்ஷோல வீதி, கொழும்பு - 02.

மேலதிக விபரங்களுக்கு எமது ஏக விநியோகஸ்தர்களாகிய யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி, சந்தைப்படுத்தல், நுகர்ச்சி, கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்



டிஜிற்றல் கொப்பி ப்றிண்டர்



டுப்ளிக்கேற்றர்



கணணி

Mel Ads

(பி/2707)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உள்ளூராட்சித்தேர்தல்கள் யாழ். மாவட்டம் 1998

நல்லதோர் வீணை
செய்தே - அதை
நலம் கெட புழுதியில்
வீசுவதோ?

## போடுங்கள்
## புள்ளடி
## உங்கள்
## வீணைக்கு நேரே!

எங்கள் சின்னம் வீணை
உங்கள் இதய வீணையாகட்டும்
மக்கள் நலம் பெறவும்
நலம் கெட்டோர் வளம் பெறவும்
உழைக்கும் கட்சியின் சின்னம் மீதே
உங்கள் எண்ணம் இருக்கட்டும்!

## ஜனவரி 29,
## ஒன்று கூடுங்கள்
## வீணைக்கே!
## வெற்றிச்சிந்து பாடுங்கள்!
## வாக்கு வீணைக்கு!
## வெற்றி உங்களுக்கு!




நாம் உங்கள் சேவகர்; நாம் உங்கள் கட்சி.

# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி.)

(ஏ-0027)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் 29-01-98

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### அன்பார்ந்த தமிழ் மக்களே!

எமது கட்சியின் தலைமைத்துவத்தைக் கொண்ட மாநகர நிர்வாகத்தினூடாக,

★ நகரின் மையப்பகுதியைப் புனருத்தாரணஞ் செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிப்போம்.

★ மருத்துவமனைகளில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகளைக் களைதல், உணவகங்களைச் சுகாதார விதிகளின்படி கண்காணித்தல், வீதிகளில் மிருகங்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துதல், வயோதிபர் பராமரிப்பு நிலையங்களை உருவாக்கி வயோதிபர்களின் நலன்களைப் பேணுதல், போதியளவு மலசலகூடங்களை அமைத்தல், வீதிகளைச் சுத்திகரித்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் நகரின் சுகாதாரத்தைப் பேணுவோம்.

★ மாநகரசபை எல்லைக்குள் பின்தங்கிய நிலையில் உள்ள குடும்பங்களின் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை ஏற்படுத்துவோம்.

★ பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பதற்கு உதவுவதோடு புதிய வீடமைப்புத் திட்டங்களை உருவாக்குவோம்.

★ அனைத்துக் குடியிருப்புகளுக்கும் மின்சாரம் வழங்குவதோடு திருப்திகரமான குழாய் நீர் விநியோகத்தை மாநகரம் முழுவதும் ஏற்படுத்திக் கொடுப்போம்.

★ போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும், அங்கவீனர்களுக்கும் மறுவாழ்வு தரக்கூடிய இல்லங்களை நிறுவுவோம்.

★ போரினால் விதவையானோருக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்கி உரிய நிவாரணம் வழங்குவோம்.

★ குடிசைக் கைத்தொழிலைப் பாதுகாத்து ஊக்குவிப்பதோடு சிறுவர் பாடசாலைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களைச் சீரமைப்போம்.

★ பொதுமக்களுக்கான பேருந்துச் சேவைகளை அதிகரித்தல், பாடசாலைப் பேருந்துச் சேவைகளை சகல பகுதிகளுக்கும் ஏற்படுத்திக் கொடுத்தல், வயோதிபர், அங்கவீனர்களுக்கு காலை 10 மணி முதல் மாலை 3 மணிவரை இலவச பேருந்துப் பயணம் போன்ற நடவடிக்கைகளை மாநகர எல்லைக்குள் மேற்கொள்வோம்.

★ மீனவர்களினது அத்தியாவசிய தேவைகளை உணர்ந்து அவர்கள் முகங் கொடுக்கும் நாளாந்தப் பிரச்சினைகளுக்குப் பொதுவானதும், நீதியானதுமான தீர்வைக் கண்டு அவர்களது வாழ்வை வளம் பெறச் செய்வோம்.

★ மாநகரசபையின் தற்காலிக ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரமாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

★ **உறுதியான, நேர்மையான, ஊழலற்ற, உத்வேகம் கொண்ட நிர்வாகத்தைப் பெற்றிடவும்...**

★ **உரிமைக்கு குரல் கொடுக்கவும், அபிவிருத்தியில் கரங்கொடுக்கவும், உறுதியான, நிலையான அரசியல் தலைமையை உருவாக்கவும்...**

## என்றும் உங்கள் சின்னம் நங்கூரம்

## ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)

X

(B-001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறை சிறை தமிழ்க் கைதிகள்
# வெள்ளி முதல் உண்ணாவிரதம்

கொழும்பு, ஜன. 26

களுத்துறைச் சிறையிலுள்ள தமிழ்க் கைதிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் உண்ணாவிரதம் இருப்பதெனத் தீர்மானித்துள்ளார்கள்.

சிறைச்சாலையில் தங்களைப் பார்க்க வருவோர் ஒரு கைதிக்கு ஒரு பார்வையாளர் என்ற அடிப்படையிலேயே பார்வையிடலாம் என்று கடந்த மாதம் 10 ஆம் திகதி வெளியான விசேட வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனையை கைவிடுமாறு ஜனாதிபதியிடம் முறையிட்டும் இன்னமும் எதுவித பலனும் கிடைக்காததால் கைதிகள் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளார்கள்.

இதேவேளை சர்வதேச வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி டெஸ்மண்ட் பெர்னாண்டோ கடந்த புதன்கிழமை களுத்துறைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்து கைதிகளை நேரில் கண்டு அவர்களது உண்ணாவிரத முடிவு குறித்து கைதிகளுடன் பேசியுள்ளார்.

அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை கைதிகளின் கோரிக்கை குறித்து ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு ஜனாதிபதிக்கு அவகாசம் கொடுக்குமாறும் அதுவரை உண்ணாவிரத முடிவைப் பின்போடுமாறும் டெஸ்மண்ட் பெர்னாண்டோ அவர்களிடம் கோரியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன கேட்டுக் கொண்டதன் பேரில் களுத்துறைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்த டெஸ்மண்ட் பெர்னாண்டோவுடன் சட்டத்தரணி செல்வி காமினி திஸநாயக்க, சட்டத்தரணி செல்வி சேபாலிக அலவத்துவல ஆகியோரும் சென்றிருந்தார்கள்.

(ஜ-10)


## அபிராமி பட்டர் விழா

ஷ விழா 27 - 01 - 98 செவ்வாய்க்கிழமை யாழ். வண்ணை கலட்டி எச்சாட்டி [illegible] அம்மன் ஆலயத்தில் பி. ப. 2-30 மணிக்கு நடைபெறும்.

அனைவரும் வருக.

சுபம்.

(52756) தா. வாசுதேவக்குருக்கள்



## அறிவித்தல்

வெகு விரைவில்

யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கம்

( JAFFNA DISTRICT TRADERS ASSOCIATION )

அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

– அமைப்பாளர்கள்

[52893]


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி தம்பிஐயா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட அமரர் சின்னத்தம்பி தம்பி ஐயா (சிற்ப ஆச்சாரியார்) 22 - 01 - 1998 அன்று காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், குகதாசன், யோகேஸ்வரி, பாலகிருஸ்ணன், அன்னலிங்கத்தின் (I. P. T தொலைத் தொடர்பு திணைக்களகம் மருதானை) அன்புத் தகப்பனாரும், சண்முகரத்தினம், கமலினி, நாகலட்சுமி, செல்வமனோகரி ஆகியோரின் மாமனாரும், பிரதீபன், துர்க்கா, நாகவாணி, பாலகுமார், கோபிசங்கர், நிசாந்தகுமார் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25 - 01 - 98 ஞாயிற்றுக்கிழமை (இன்று) பகல் 3 – 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
த. தங்கம்மா (மனைவி) பிள்ளைகள்.

காளிகோயிலடி,
உடுவில். (52889)

### கந்தையா சிவராசா

(29 ஸ்ரீ 849, அச்சுவேலி மினிபஸ் உரிமையாளர்)

தம்பாலையைச் சேர்ந்த கந்தையா சிவராசா 24 - 01 – 98 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும், இரத்தினம் (விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி), வள்ளியம்மை (டென்மார்க்), வடிவேலு (டென்மார்க்), சரவணமுத்து (டென்மார்க்), கணபதிப்பிள்ளை (டென்மார்க்), செல்வமணி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லத்துரை (டென்மார்க்), கமலாதேவி (ஆசிரியை, வவுனியா சைவப்பிரகாசவித்தியாலயம்), செல்வராணி (டென்மார்க்), செல்வராணி (டென்மார்க்), சசிகலாதேவி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் காந்தீபன், பிரதீபன், பார்த்தீபன், சுஜீபன், நிரோஜன் ஆகியோரின் சித்தப்பாவும், சங்கீதா, ஜீவகீதா ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசதுரை, சின்னத்துரை, சுப்பையா, தம்பிப்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை, நடேசு ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25 - 01 - 98 வவுனியாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. நவரட்ணம்

தம்பாலை,
அச்சுவேலி. (52895)

## தேர்தல் டிக்கெட் ராவுக்கு இல்லை!

முன்னாள் பிரதமர் பி. வி. நரசிம்மராவை காங்கிரஸ் கட்சி தேர்தலில் போட்டியிட அனுமதிக்கவில்லை.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் சீதாராம் கேசரிகட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1992 ஆம் ஆண்டு பாபர் மசூதி தகர்க்கப்பட்ட போது தடுத்து நிறுத்த அவர் தவறிவிட்டார் என்பதால் அவரை தேர்தலில் போட்டியிட அனுமதிக்கவில்லை என கேசரி மேலும் தெரிவித்தார்.

ராவ் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பதால் தான் அவருக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்படவில்லை என்ற கூற்றை கேசரி நிராகரித்தார்.

(இ-9)

## நூலகம் திறப்பு

வேலணை கிழக்கு மகாவித்தியாலய மாணவர்களின் நலன் கருதி அங்கு நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் திரு. வீ. கு. சிவராசா தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய ஆசிரியை திருமதி வேதவல்லி அரசரத்தினம் நூலகத்தைத் திறந்து வைத்தார். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(ஐ-111)

## நெடுந்தீவில் ம. எண்ணெய் தட்டுப்பாடு

நெடுந்தீவு, ஜன. 26

நெடுந்தீவில் மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இங்கு சில தினங்களுக்கு முன் போதியளவிற்கு மண்ணெண்ணெய் கையிருப்பில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் திடீரென அதற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

[ஐ-111]

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ். மாவட்ட கூட்டுப் பத்தாட்ட சமிதியின் செயற்பாட்டை ஊக்குவிப்பது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இன்று திங்கள் பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. அங்கத்துவ [illegible] பிரதிநிதிகள் கூட்டத்துக்கு அழைக்கப்படுள்ளனர்.

(ஐ)

## மதிய உணவு உண்ட மூவர் சுயநினைவு இழந்தனர்!

### நீராவியடிப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 26

மதிய உணவு உண்டு சில மணி நேரத்தில் சுயநினைவு இழந்த மூன்று பெண்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளியன்று பிறவுண் வீதி, நீராவியடியில் இடம்பெற்றது.

மதிய உணவாக இவர்கள் சோறும், பருப்பும், சுண்டைக்காய்க் கறியும் சமைத்து உண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யோகேஸ்திரம் சத்தியவதி (வயது 55), அவரது சகோதரியான நல்லசிவம்பிள்ளை வேதநாயகி (வயது 56), இவரது மகளான ந. தியாகநிதி (வயது 18) ஆகிய மூவருமே பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

பாடசாலைக்கு சென்றிருந்த ஒரு மகள் வீட்டுக்கு வந்த போது இவர்கள் இருந்த நிலைமையைக் கண்டு ஊராரின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் இவர்களைச் சேர்த்தார்.

அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுத் தற்போது இவர்கள் வார்ட்டுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் சில சமயம் சுண்டைக்காய் என நினைத்து வேறு ஏதாவது நஞ்சுக் காயைச் சமைத்திருக்கலாம் அல்லது இவர்கள் சமைத்து வைத்த உணவில் பல்லி போன்ற ஏதாவது விழுந்திருக்கலாம் என வைத்தியசாலை வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்தன.

(இ-9)

## இலங்கையரை வெளிநாடு அனுப்பும் பயண முகவர் குழு ஜேர்மனியில் கைது

கொழும்பு, ஜன. 26

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பிவரும் முகவர் குழுவொன்றை ஜேர்மன் பொலிசார் கைது செய்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளுக்கும் வட அமெரிக்காவுக்கும் இலங்கையர்களையும் இந்தியர்களையும் இந்தக்குழு பெருமளவு பணத்தைப் பெற்றுக் கொண்டு கடத்தி வருகிறதாம்.

கடந்த மாதம் 9ஆம் திகதி ஜேர்மனியில் இவ்வாறான ஆட்கடத்தல் வேலைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 39 வயதான நபர் ஒருவரை ஜேர்மன் பொலிசார் கைது செய்ததையடுத்து அங்கு வீடு வீடாகவும் அலுவலகங்களிலும் பொலிசார் பலத்த தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஆளொன்றை அனுப்ப 5 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவும், வட அமெரிக்காவுக்கு அனுப்ப 13 இலட்சம் ரூபாவும் அறவிடப்படுகிறது. இது தொடர்பாக ஜேர்மன் பிரஜை ஒருவரையும் அந்த நாட்டுப் பொலிசார் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

[ஜ-10]

### சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டம்

## இன்னும் முடிவு செய்யவில்லை என்கின்றனர் மகாநாயக்கர்கள்

கொழும்பு, ஜன. 26

நாட்டின் சுதந்திர பொன் விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதா? அல்லது இல்லையா? என்பது குறித்து தாம் எந்த விதத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்று மல்வத்த அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்கள் அறிவித்துள்ளனர்.

சில பத்திரிகைகளில் இது தொடர்பாக வெளிவந்த செய்திகள் முற்றிலும் தவறானவை என்று இரண்டு மகாநாயக்கர்களும் தெரிவித்துள்ளதாக இலங்கை வானொலி நேற்று முன்தினம் அறிவித்தது.

(இ-9)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### வளர்மதி கல்விக் கழகம்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

எமது கல்விக் கழகத்தில் கல்வி பயின்று 1997 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்:

1. செல்வன் சதாசிவம் கனராஜன்
2. செல்வி கேனுமா தில்லைநாதன்
3. செல்வி மயூரி கனகரத்தினம்
4. செல்வன் கனகலிங்கம் திவாகர்
5. செல்வி சாதனா விஜயரத்தினம்
6. செல்வன் கந்தசாமி கஜூகன்
7. செல்வி யமுனா அருமைரத்தினம்
8. செல்வி ரவீந்தினி பாலசுப்பிரமணியம்
9. செல்வன் ஞானேஸ்வரன் மயூரன்
10. செல்வன் இந்திரபவன் செயந்தன்
11. செல்வி தயாளநிதி தங்கராஜா

ஆகிய இவர்களோடு இன்னும் சித்தி பெற்ற மட்டுவில் பதி வாழ் மாணவர்கள் அனைவரையும், இவர்களின் வெற்றிக்குச் சிறப்பான முறையில் கற்பித்த ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வளர்மதி கல்விக் கழகம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(52900)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுக் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கும் ஜனநாயக சூழல் மலர்வதற்காக......

**யாழ். குடாநாட்டில் வாழும் வாக்காளப் பெருமக்களே!**

வணக்கங்கள்.

அவலமும், அச்சமும், ஐயப்பாடுகளும் நிரம்பிய இன்றைய வாழ்க்கைச் சூழல் முற்றாக மாற்றப்படல் வேண்டும். இதற்கு பொதுவாழ்வில் மாற்றுக் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கும் ஜனநாயக அரசியற்செயற்பாடுகள் மலர வேண்டும். இந்த இலக்குநோக்கிய பயணத்திற்கான ஓர்ஆரம்பமாகவே எதிர் வரும் தேர்தலை நாங்கள் கருதுகின்றோம். எனவே புதியதோர் ஆரம்பத்திற்கான அங்கீகாரம் கிட்டும் வகையில் உங்கள் வாக்குகளைப் பயன்படுத்தும்படி வேண்டுகின்றேன்.

நன்றி!

க. சுரேஷ் பிரேமச்சந்திரன்,
செயலாளர் நாயகம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.
(EPRLF)

இந்த மண்ணில் மக்கள் வாழ்வு மலரவும்

தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தில்

உண்மையான ஜனநாயக சக்திகள் பலம்பெறவும்..

உள்ளூர் நிர்வாகத்தில்

உங்கள் பிரதிநிதிகள் பங்குபெறவும்...


ஒற்றுமைக்காக உரத்த குரல் எழுப்பவும்...

ஐக்கியப்பட்ட வெகுஜன அரசியல் தலைமையைக் கட்டியெழுப்பவும்..

அச்சந்தரும் ஆயுதநிழல் இந்த மண்ணிலிருந்து அகலவும்...

இதயசுத்தியுடன் உங்களுக்காக வாழ்வை அர்ப்பணிக்கும்...

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரை பூவுக்கு நேரே புள்ளடியிட்டு ஆதரியுங்கள்**



# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
## [E. P. R. L. F.]

(67673)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இப்படியும் ஒரு கேள்வி

இலங்கையின் சுதந்திரப் பொன் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி சிங்கள மக்களின் மதிப்பை — ஆதரவைப் — பெற வேண்டும். அதே போன்று யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தி இங்கு இயல்பு வாழ்க்கை திரும்பி விட்டதாக வெளி லகுக்குக் காட்டவேண்டும்.

இந்த இரண்டிலுமே அரசு இப்போது அதிக கவனம் செலுத்தி வருகிறது இனப்பிரச் சினைக்கான தீர்வுப் பொதி குறித்து பெரிதாகப் பேசப்படு வதில்லை;

தமிழர்களுக்கு இன்னென்ன உரிமைகளையே வழங்கலாம், வழங்க முடியும் என்பதில் அர சாங்கமும், பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட் சியும் இன்னும் ஓர் இணக்கத் துக்கும் வரவில்லை.

அவ்வாறிருந்தும் தமது தீர் வுப் பொதி தமிழர்களுக்குத் தக்க உரிமைகளை வழங்குவ தாக அரசு கூறிக்கொள்கிறது. திம்பு யோசனைகளை விடத் தமது பொதி, தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை அதிகம் நிறைவேற்றும் வகை யில் உள்ளதாகவும் ஜனாதிபதி சொல்லிக் கொள்கிறார்.

ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் இதுவரை யில் இறுதியாக்கப்பட்ட தீர்வுப் பொதி, தமிழர்களின் அர சியல் அபிலாசைகளை நியாய மான முறையில் பூர்த்தி செய்யவில்லை.

தமிழர் தாயகமான வடக்கு— கிழக்கின் தன்னாட்சி அரசு ஒன்று நிறுவப்பட வேண்டும். தமிழர்கள் தமது அலுவல் களைத் தாமே நிர்வகிக்க வகை செய்யப்பட வேண்டும். என்ற ஆகக்குறைந்த— அடிப் படை — அபிலாசைகளைத் தானும் தீர்வுப் பொதி நிறை வேற்றுவதாக இல்லை.

இதற்கு மத்தியில் இப்போது இணைந்திருக்கும் வடக்கு — கிழக்கை தொடர்ந்து இதே நிலையில் வைத்திருப்பதா அல்லது பிரித்துவிடுவதா என்பதனை அறிய சர்வஜன வாக்கெடுப்பு நடத்த அரசு — அமைச்சரவை — முடிவு செய் திருக்கிறது.

வடக்கு — கிழக்கைப் பிரிப் பதற்கான ஒரு முஸ்தீபாக சர்வஜன வாக்கெடுப்பு நடத் தும் முடிவை தாம் கடுமையாக எதிர்ப்பதாகவே யாழ்ப்பாணம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகள் தெரிவிக்கின்றன.

அந்த முடிவை மாற்று வதான எவ்வித வாக்குறு தியையும் ஜனாதிபதியிட மிருந்து பெறாமலே அக்கட்சி களின் தலைவர்கள் குடா நாட்டு வாக்காளர் வீடுகளுக்கு ஏறி இறங்குகிறார்கள்.

வடக்கு — கிழக்கு இணைந் திருக்க வேண்டுமா? என்று சர்வஜனவாக்கெடுப்பு நடத்த முனைந்திருக்கும் அரசு —

வடக்கு - கிழக்கு தொடர்ந் தும் இலங்கையுடன் இணைந்தி ருக்க வேண்டுமா? என்று கேட்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முன்வருமா? — என்ற கேள்வியை தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது முன் வைத் திருக்கிறார் ரெலோவின் முதல் வர் எம். கே. சிவாஜிலிங்கம்.

தமிழர்கள் இந்த நாட்டின் தேசிய இனம் என்ற வகையில் அவர்கள் தங்கள் எதிர்காலம் குறித்து முடிவு செய்யும் உரிமை உடையவர்கள். ஆகை யால் அவர்களின் விருப்பத்தை அறிய சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கேட் பதில் நியாயமில்லை எனக் கூறமுடியாது.

தமிழர்களின் இனப் பிரச் சினைக்கு இறுதியும் முடிவு மான தீர்வு ஒன்றைக் காண் பதற்கு மேற்கூறப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு பெரிதும் உதவும் என நம்பலாம்.

## மாங்குளத்துக்கு வடமேற்கே மோதல்

கொழும்பு, ஜன. 26

மாங்குளத்துக்குவடமேற்கே வெற்றி உறுதிப்படையினர் விடுதலைப் புலிகளின் சிறு குழு ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று பாது காப்பு அமைச்சின் நடவடிக் கைத் தலைமையகம் தெரி வித்தது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மூன்று விடு தலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும்— ரீ–56 ரக துப்பாக்கிகள் மூன் றையும், ஒரு வானொலிக் கரு வியையும் படையினர் மீட் டுள்ளதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-9)

## கப்பலில் வந்த பொருள்களுக்கு விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஜன. 26

மேர்ஸ் ஹன்டி கப்பலில் கட்டணமின்றிக் கொண்டு வரப்பட்ட பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட் டது.

இது தொடர்பான கூட்ட மொன்று யாழ். செயலகத் தில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் யாழ். செயலக அதிகாரிகள் மற்றும் அரச வர்த்தக கூட்டுத்தாப னம், கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம், மரக் கூட் டுத்தாபனம், யாழ். கூட்டு றவு சமாசம், கமநல சேவை கள் திணைக்களம், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், நுகர்வோர் பாதுகாப்புச் சங் கம், போன்றவற்றின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கப்பலில் எடுத்து வரப்பட்ட பொருள் களுக்கான பங்கீட்டு முறை பற்றியும் ஆராயப்பட்டது.

(இ-5)

## அண்ணா கலைமன்றம் உதவி

பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினரால் வறுமை நிலையிலுள்ள 33 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான கல்வி உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

மேலும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற இரு மாண வர்களுக்கு உயர்கல்வி ஊக்கு விப்பு நிதியிலிருந்து 7 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதுடன் இவர்களுக்கு பல்கலைக்கழக கல்வி முடியும்வரை ஊக்கு விப்பு நிதியும் வழங்கப்பட வுள்ளது.

(இ-28-8)

ஈ. பி. ஆர். எல். எவ். கூறுகிறது

# நேர்மையான பேச்சுக்கு புலிகள் முன்வர வேண்டும்

## பேரம் பேசும் பலம் அவர்களிடம் இன்னும் உண்டு

யாழ்ப்பாணம், ஜன. 26

''அரசுடன் பேரம் பேசும் பலம் இன்னும் புலிகளிடம் உண்டு. எனவே அவர்கள் நேர்மையான பேச்சுவார்த் தைக்கு முன்வர வேண்டும். பேச்சுவார்த்தையைத் தந் திரோபாயமாக நோக்கக் கூடாது.''

ஈ.பி. ஆர். எல். எவ் செய லாளர் நாயகம் கே. சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்த அறிக்கையில் மேற்கண்ட வாறு தெரிவிக்கப்பட்டுள் ளது.

'சஞ்சீவி' வாரஇதழின் உள் ளும் புறமும் பகுதியில் யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சி களிடம் கேட்கப்பட்டகேள்வி களுக்குப் பதில் அளிக்கும் விதத்தில் இந்த அறிக்கை விடுக்கப்பட்டது.

★ போராட்டத்தில் முக் கிய பங்கு வகிப்பவர்கள் புலி கள். எனவே புலிகள் எதிர்ப்பு விவகாரத்தில் தமிழ்க் கட்சி களின் நிலைப்பாடு என்ன?

★ தமிழ்க் கட்சிகளிடம் உள்ள ஆயுதங்கள் பாதுகாப் புக்கு மட்டுமா? அல்லது புலி களைத் தேடிப் பிடித்து அழிக் கவா?

★ அரசிடமிருந்து பெறும் வேதனம் எவ்வளவு?

சஞ்சீவி 'உள்ளும் புறமும்' பகுதியில் எழுப்பப்பட்ட மேற்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் விதத்தில் ஈ. பி. ஆர். எல். எவ். நேற்று விடுத்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

ஆரம்பத்தில் ஆயுதப் போராட்டத்தில் புலிகள் தவிர ஈ. பி. ஆர். எல். எவ், ஈரோஸ், புளொட், ரெலோ என நான்கு கட்சிகள் முன் னணியில் திகழ்ந்தன.

ஆனால் தாம் மாத்திரமே தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதி களாக இருக்கவேண்டும் என் பதற்காக ஆயுத பலத்தில் சக்தி வாய்ந்திருந்த புலிகள் இயக்கம் ஏனைய இயக்கங் களைத் தடை செய்தது. இத னால் தனிநாடு என்ற போராட்டம் திசைமாறிய துடன் ஏனைய கட்சிகளில் இருந்த நூற்றுக்கணக்கான போராளிகள் கொல்லப்பட் டும் போராட்டத்தை விட் டொதுங்கி வெளிநாடுகளுக் கும் சென்றுவிட்டனர்.

[illegible]

கள் தடை செய்யப்பட்ட போது, அதனைக் கண்டித்து ஜனநாயக சூழல் ஒன்று இருக்க வேண்டுமென அன்றி லிருந்து குரல் கொடுத்தோம். இன்று வரையும் அதில் எவ் வித மாற்றமும் இல்லை. இன் றும் கூடச் சொல்கின்றோம்: ஜனநாயக சூழல் ஒன்று உரு வானாலே, எமக்கு எப்படி யான ஓர் ஆட்சிமுறை தேவை என்பதை அரசுக்கும் உலகுக் கும் திட்டவட்டமாக உணர்த்த முடியும்.

### ஜனநாயக சூழல்வேண்டும்

மக்களின் ஆதரவு இல்லாத அவர்களின் ஒப்புதல் இல் லாத எந்தக் கோரிக்கையும் உலகத்தின் செவியில் ஏறாது. புலிகள் ஒரு மாற்று யோச னையை வைத்தால் கூட அவற்றை ஆராயக்கூடிய தன் மையும் அது சரியெனில் அதனை ஆதரிக்கக்கூடிய தன் மையும் ஒரு ஜனநாயக சூழலி லேயே ஏற்பட முடியும். இல் லாவிடில் எப்படியான மாற் றுத் தீர்வைக் கூறினாலும் கூட, மக்கள் அங்கீகாரம் அற் றவை என்ற முத்திரையே குத்தப்படும். எனவேதான் கூறுகின்றோம், ஒரு ஜன நாயக சூழல் ஏற்பட, ஜன நாயகக் கட்சிகள் செயற்பட புலிகள் அனுமதிக்கவேண் டும்.

எமது மக்கள் படித்தவர் கள். யார் சரியாகச் செயற் படுகின்றார்கள்? யாரை அங்கீகரிக்க வேண்டும் என் பது மக்களுக்குப் புரியும். இதனை விடுத்து ஜனநாயக அமைப்புக்களையும் ஜனநா யக செயற்பாடுகளையும் ஆயுதம் மூலம் கட்டுப்படுத்து வதை நாம் ஏற்றுக்கொள்ள வில்லை.

### குடாநாட்டில் ஏற்பட்ட தோல்விகள்

இரண்டாவதாக யாழ். குடாநாட்டில் அல்லது வட மாகாணத்தின் பெரும் பகுதி யில் 90—95 இற்கு இடைப் பட்ட காலத்தில் முழு யாழ். குடாநாடும், வடமாகாணத் தின் இன்னும் பல பிரதேசங் களும் இராணுவக் கட்டுப் பாட்டுக்குள் போயுள்ளன. புலிகள் எவ்வளவுதான் பெருந்தொகையான ஆயுதங் களை வைத்திருந்தபோதும் இப்பிரதேசங்களை இழந்த தானது, யுத்தத்தில் எமக்கு ஏற்பட்டுவரும் தோல்வி களையே புலப்படுத்துகின் றது.

பல போர்களில் புலிகள் வெற்றி அடைந்தார்கள். முல்லைத்தீவு, புழுக்குணாவ, தாண்டிக்குளம் எனப் பல போர்கள் அவர்களின் வீரத் துக்குச் சான்று. ஆனால் மொத்தமான யுத்தத்தில் புலிகள் தோல்வி அடைந்து வருவதையே நாம் யதார்த் தத்தில் பார்க்கக்கூடியதாக உள்ளது.

### மக்கள் களைத்துவிட்டனர்

மறுபுறம் 15 வருட யுத்தத் தில் மக்கள் அடைய வேண் டிய துன்பங்கள், துயரங்கள் யாவும் அடைந்து சகலவற்றை யும் இழந்து களைப்படைந்து விட்டார்கள். யுத்தத்தைத் தொடரும் மனப்போக்கு மக் களுக்கு ஒரு சதமேனும் கிடை யாது.

இந்நிலையில் புலிகள் அர சாங்கத்துடன் பேசவேண்டும் என்பதே எமது இரண்டாவது நிலைப்பாடாகும். இன்றைய சூழ்நிலையில் ஆயுத சக்தி என்ற அடிப்படையிலும் ஸ்ரீலங்கா அரசுக்குத் தொடர்ந்து இராணுவ ரீதி யாகத் தொந்தரவுகொடுக்கக் கூடியவர்கள் என்ற அடிப் படையிலும், புலிகளுக்கு அர சிடம் பேரம் பேசும் வலு இன் னும்இருக்கின்றதாகவே நாம் நம்புகின்றோம்.

எனவே இந்தச் சந்தர்ப்பத் தைப் பயன்படுத்தினால் நிச் சயமாகக் கௌரவமான ஒரு தீர்வு கிடைக்க வழியுண்டு. அதற்குத் தமிழ் மக்கள் மத்தி யிலும் காத்திரமான ஆதரவு கிடைக்கும். இவற்றை விடுத்து யுத்தம் தான் ஒரே வழி எனில், இன்னும், பல ஆயிரக்கணக்கான மக்கள் அநாவசியமாக அழியவே வழிவகுக்கும்.

எனவே பேச்சுவார்த்தை களைத் தந்திரோபாயமாகப் பார்க்காமல் நேர்மையான, உண்மையான பேச்சு வார்த் தைக்குப் புலிகள் வரவேண் டும் என்பதேஎமதுகோரிக்கை யாகும்.

எனவே புலிகள் தொடர் பாக எமது நிலைப்பாடு இது தான்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் நம் பகத்தன்மை அற்றது. அவர் கள் எதனையும் தரமாட்டார் கள். எமக்கு இது தொடர் பான கசப்பான வரலாறுகள் உண்டு எனப் புலிகள் சொல் லலாம். அதனை இல்லை என்று மறுப்பதற்கில்லை.

ஆனால் இன்று நாம் விரும் பியோ விரும்பாமலோ, ஸ்ரீலங்கா அரசாங்கம் நியாய மான ஒரு பேச்சு வார்த்தைக் குத் தயாராக இருப்பதாக வும், புலிகள் தான் பேச்சு வார்த்தையைக் குழப்புவதாக வும் உலகம் முழுவதும் ஒரு கருத்து உருவாக்கப்பட்டுள் ளது.

இந்நிலையில் நேர்மையான பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடு படுவதன் மூலமே இந்த அர சாங்கம் நம்பகத் தன்மை கொண்டதா? இல்லையா? என்பதை உலகுக்கு உணர்த்த முடியும்.

எனவே சகல கோணங்க ளில் இருந்து பார்த்தாலும் பேச்சு வார்த்தை ஒன்றின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம்.

எனவே தான் தொடரும் இழப்புக்கள் அநாவசிய மானவை எனக் கூறுகின் றோம். தனிநாட்டுக்காக, தமிழ் ஈழத்துக்காக இழப்புக் கள் என்றால் அதில் ஓர் அர்த் தம் இருக்கின்றது. ஒன்று பட்ட இலங்கைக்குள் தீர்வு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நுவரெலியாவில் நேற்று 3 மின் மாற்றிகள் தகர்ப்பு

நுவரெலியா, ஜன. 26

நுவரெலியாவில் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் 3 மின்மாற்றி கள் குண்டு வைத்துத் தகர்க் கப்பட்டன.

அதிகாலை 3-30மணிமுதல் 4-30 வரை வெடித்த 3குண்டு களினால் நுவரெலியாப் பிர தேசம் அதிர்ந்தது என அப் பிரதேச வாசிகள் தெரிவித் தனர்.

காமினி வித்தியாலயம் அருகில் முதலாவது மின் மாற்றி தகர்க்கப்பட்டது.

சுமார் 30 நிமிடம் கழித்து ஹவாஎலியாவில் இரு மின் மாற்றிகள் தகர்க்கப்பட்டன.

நேற்றுமாலை 4-20 மணி யளவில் நீதிமன்றம் அருகி லுள்ள மின்மாற்றியில் வைக் கப்பட்டிருந்த மற்றுமொரு குண்டு இராணுவத்தினரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (இ-21)

## யாழ். - கண்டி கிரிக்கெட் போட்டி ரத்து

யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிக்கும் கண்டி மாவட்ட கிரிக்கெட் அணிக்கும் இடை யில் இன்று திங்கட்கிழமை கண்டி அஸ்கிரிய விளை யாட்டு மைதானத்தில் நடை பெற இருந்த போட்டி பாது காப்புக் காரணத்துக்காக ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் அணியினர் கொழும்பில் தங் கியிருந்து பயிற்சி பெற்று வருகின்றனர். (இ)

## நாளை

**தை 14**

செவ்வாய்க்கிழமை

திதி: சதுர்த்தசி பிற்பகல் 2.09 வரை.

நட்சத்திரம்: உத்தராடம் வைகறை 5.19வரை.

தை அமாவாசை விரதம்

சுபநேரம்: 11 06-12.36

ராகுகாலம்: 3.36-5.06

(பகலுக்கும் இரவுக்கும் இடைப்பட்ட நேரப்படி)

## மலேரியா தடை இயக்க வேலை பாதிப்பு

யாழ். சுகாதார சேவை பணிப்பாளர் பிரிவில் மலே ரியா தடை இயக்க வைத்திய அதிகாரி இல்லாததால் அப் பிரிவு பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக் கப்படுகிறது.

மலேரியா தடை இயக்கபிர தேச வைத்திய அதிகாரி கடந்த 12ஆம் திகதியிலிருந்து நுவரெலியாவுக்கு இடமாற் றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு எவ ரும் இதுவரை நியமிக்கப்பட வில்லை. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். தேர்தல் தொடர்பாக இதுவரை 31 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ். தேர்தல் தொடர்பாக இதுவரை 31 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தலைக் கண்காணிக்க விருக்கும் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

சுயாதீனமான பக்கச் சார்பற்ற அமைப்பான தேர்தல் வன்முறைக்கண்காணிப்பு நிலையம் (CMVE), மாற்றுக் கொள்கைகள் நிலையம் (CPA), சுதந்திர தொடர்பு சாதன இயக்கம் (FMM) ஆகியன நேற்று விடுத்த அறிக்கையில் இதைத் தெரிவித்துள்ளன.

ஊர்காவற்றுறை பொலீஸ் பிரிவில் 14 சம்பவங்களும் —

யாழ். பொலீஸ் பிரிவில் ஏழு சம்பவங்களும் —

சாவகச்சேரி, சுன்னாகம் பொலீஸ் பிரிவில் தலா 4 சம்பவங்களும் —

நெல்லியடி, கோப்பாய் பிரிவில் தலா ஒவ்வொரு சம்பவமும் — முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதுவரை முறையிடப்பட்டுள்ள சம்பவங்களில் பிரதான குற்றச் செயல் ''அச்சுறுத்தலும் மிரட்டலும்'' என்று அக்குழு தெரிவித்துள்ளது.

கிடைத்துள்ள முறைப்பாடுகளில் ஐந்து சம்பவங்கள் திடீர் தாக்குதல் சம்பவங்கள் என்றும் —

ஐந்து சம்பவங்கள் சுடுகலங்களுடன் தொடர்புடையவை என்றும் — அக்குழு தெரிவித்துள்ளது.

தென் இலங்கை உள்ளூராட்சித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்களவு உயர்ந்த எண்ணிக்கை என்றும் மேலும் அக்குழு தெரிவித்தது. (இ-3)

# தமிழர் மீதான தாக்குதலை நிறுத்தக் கோருகிறார் ஜோஸப்

கண்டி தலதா மாளிகை குண்டு வெடிப்பைத் தொடர்ந்து கண்டி நகரில் சில இடங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக வன்செயல்கள் இடம்பெற்றுள்ளது சம்பந்தமாக மட்டக்களப்பு மாவட்ட எம். பியும் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றக் குழுத் தலைவருமான ஜோஸப் பரராஜசிங்கம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்தானந்த டி சில்வாவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

மட்டக்களப்பில் இருந்து அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஜோஸப் பரராஜசிங்கம் தமிழ்மக்களின் பாதுகாப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் படியும் மேலும் வன்செயல்கள் இடம் பெறாதவண்ணம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார். (இ)

# சுயேச்சைக் குழு எம். பி. அச்சுறுத்தப்பட்டாராம்

## கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு

யாழ்ப்பாணம், ஜன 26

தீவுப் பகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடும் குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர்களால் கரம்பன் மேற்கில் வைத்து அச்சுறுத்தப்பட்டதாக தேர்தல் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரம்பன் மேற்கில் உள்ள அவரது தாயாரின் வீட்டுக்கு அவர் நேற்றுச் சென்ற சமயமே இவ்வாறு அச்சுறுத்தப் பட்டதாகவும் —

அவர்களிடம் எல். எம். ஜி., ஆர். பி. எம். ஜி, ஏ கே. 47 முதலிய ஆயுதங்கள் இருந்தன என்றும் —

அவர்களால் ஒரு வேட்டு தீர்க்கப்பட்டதாகவும் — தமக்கு முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது என்று தேர்தல் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. (இ-3)

# தமிழ்க்கட்சிகள் பல இடங்களில் நேற்று தேர்தல் பிரசாரம்

யாழ்ப்பாணம், ஜன. 26

எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவிருக்கும் யாழ். உள்ளூராட்சித் தேர்தலின் இறுதிக்கட்டமாக தமிழ்க் கட்சிகள் நேற்று பல இடங்களில் பிரசாரக் கூட்டங்களை நடத்தின.

தமிழர் விடுதலைக்கூட்டணி நேற்று குருநகர், நல்லூர் ஆகிய இடங்களில் கூட்டங்களை நடத்தியது.

இக்கூட்டங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி உப தலைவர் வி. ஆனந்தசங்கரி, கூட்டணிப் பிரமுகர்களான மாவை சேனாதிராசா, சட்டத்தரணிகள் சிவபாலன், ரவிராஜ், வவுனியா கூட்டணி பிரமுகர் சுதாகரன் உட்படப் பலர் உரையாற்றினர்.

ஈ.பி.டி.பியின் பிரசார கூட்டங்கள் நேற்று கந்தர்மடத்திலும், அரியாலையிலும் நடைபெற்றன.

இக்கூட்டங்களில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, மாநகரசபை முதன்மை வேட்பாளர் வி. கே. ஜெகன், நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார் மற்றும் சமீர், யோகன், நிசாந்தன் ஆகியோர் உரையாற்றினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# வவுனியா வதிவிட 'பாஸ்' புதிய நடைமுறையில் மாற்றம்

வவுனியா, ஜன. 26

கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற பாதுகாப்பு உயர் மட்டக் கூட்டமொன்றில் வவுனியாவுக்குள் வருபவர்களுக்கு வழங்கப்படுகின்ற பாஸ் விடயமாகப் புதிய நடைமுறைகளைக் கையாளுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி 18 ஆம் திகதிக்குப் பின்னர் வவுனியாவுக்குள் வருபவர்களுக்கு மூன்றுதினங்கள் மட்டுமே பாஸ் வழங்கப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பாஸ் நடைமுறையால் மக்களுக்குத் தற்போது ஏற்பட்டுள்ள சிரமம் குறித்து வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் பாதுகாப்பு இணைப்பதிகாரியுடன் தொடர்புகொண்டு பேசியதன் பின்னர் இந்த நடைமுறையில் மாற்றமும் கொண்டுவரப்பட்டுள்ளது

இதன்படி 18 ஆம் திகதிக்கு முன்னர் வந்தவர்களுக்கு எதுவித சிரமமுமின்றி முன்னரைப் போலவே வதிவிடப் பாஸ்புதுப்பிப்பதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கப் பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

வதிவிடப் பாஸ் புதுப்பிப்பதில் இடையூறு இருக்குமானால் அவ்வாறானவர்கள் தன்னுடன் தொடர்புகொள்ளுமாறு வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் கேட்டுள்ளார்.

பாஸ் புதுப்பிப்பதில் ஏற்படடுள்ள மக்களின் சிரமங்கள் குறித்து வவுனியா நகர சபைத் தலைவர் ஜீ ரி.லிங்கநாதன் வவுனியா அரச அதிபருடனும் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருடனும் தொடர்பு கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு அரணுக்குள் ஊடுருவியபுலிகள்மீது தாக்கு

## நெடுங்கேணிப் பகுதியில் சம்பவம்

வவுனியா, ஜன. 26

நேற்றுப் பிற்பகல் 2. 45 மணியளவில் நெடுங்கேணி பாதுகாப்பு அரணுக்குள் ஊடுருவிய 4 விடுதலைப் புலி உறுப்பினர்கள் படையினரின் தாக்குதலில் உயிரிழந்ததாக படை வட்டாரங்கள் தெரிவித்தன:

இவர்களின் சடலங்களை மணலாறு படையினர் புலிகளிடம் ஒப்படைப்பதற்காக செஞ்சிலுவைச் சங்க வவுனியா கிளைத் தலைவர் சிவநாதன் கிஷோரிடம் ஒப்படைத்துள்ளதாகவும்—

விடுதலைப் புலிகளிடம் அச்சடலங்களை இன்று ஒப்படைக்க அவர் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-164-3)

## நேர்மையான..:

(11 ஆம் பக்கத் தொடர்)

என்றால் இழப்புக்களைக் குறைத்துப் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை ஆகும்.

ஈ பி. ஆர். எல். எவ்வைப் பொறுத்தவரை 1990 ஆம் ஆண்டின் பின்னர் நாம் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டோம். முழுமையான ஜனநாயகக் கட்சியாக எம்மை மாற்றிக்கொண்டுள்ளோம். அதற்கு சுருக்கமான காரணம் எம்மைப் பொறுத்தவரை ஆயுதப்போராட்டம் சீர்குலைந்துவிட்டதென்பதே.

இவ்வடிப்படையில் யாருடனும் நின்று யாருக்கெதிராகவும் மோதவேண்டிய தேவை எமக்கில்லை, ஆயுதங்களில் விருப்பும், நம்பிக்கையும் உடையவர்களைக் கட்சியில் இருந்து விலக்கி விட்டோம். எனவே யாரையும் தேடி அழிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஒரு காலகட்டத்தில் எமது பொது எதிரியுடன் நின்று நூற்றுக்கணக்கான எமது கட்சித்தோழர்கள் தமிழ் மக்களின் காவலர்கள் என்று சொல்பவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். ஆனால் அப்படியான தவறுகளில் ஈ பி. ஆர். எல். எவ். ஈடுபட வில்லை என்பதைப் பெருமிதத்துடன் எம்மால் பட்டவர்த்தனமாகச் சொல்லிக்கொள்ள முடியும்.

துணைப்படை

உள்ளோருக்கே நிதிஉதவி உங்கள் மூன்றாவது கேள்வியான அரசிடம் இருந்து எவ்வளவு பணம் வாங்குகின்றீர்கள் என்ற கேள்வி எம்மை நோக்கி எழமுடியாது. துணைப்படையாகச் செயற்படுபவர்களுக்கே அக்கேள்வி பொருத்தமானது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈ. பி. டி. பி...

(முதலாம் பக்கத் தொடர்)

மேற்கொண்டு வந்தனர் என்றும் —

விடுதலைப் புலிகள் போராளிகளான மேஜர் ஆழியன், கப்டன் அரவிந்தன் ஆகியோர் படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட போது வீரச்சாவடைய ஈ. பி. டி. பியினர் காரணமாக இருந்தனர் என்றும் — விடுதலைப் புலிகளின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதுவித இழப்பும் இன்றி மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலில் முதன்மை வேட்பாளர் ஒருவர் உட்பட 9க்கும் மேற்பட்ட ஈ.பி. டி. பியினர் கொல்லப்பட்டனர்.

★ ஆர். பி. ஜி. எல். எம். ஜி — 1

★ ரி 56 - 1 ரக துப்பாக்கிகள் — 3

★ ரி56- 2 ரக துப்பாக்கிகள் — 3

★ ரி 81- ரக துப்பாக்கி — 1

★ ரி 56 பட்மொடல் — 1

★ நடுத்தர ரவைகள்— 2, 300

★ ரி 81 ரவைக் கூடுகள் — 1

★ நடுத்தர ரவைகள் விநிகுடன்— 600

★ ரம் ரவைக் கூடுகள் — 2

★ ஏ. கே. ரவைக் கூடுகள் — 43

★ கே 400 ரக குண்டுகள் — 1

★ தண்ணீர் கான்— 1

ஆகியவை கைப்பற்றப்பட்டன.

இப்படி புலிகள் மேலும் அறிவித்துள்ளனர். (இ-164)

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டன. சில கடைகள் சூறையாடப்பட்டதாகக் கூறப்பட்டது.

மாலையில் இந்து கலாசார மண்டபத்தை ஒரு குழு தாக்க முற்பட்டதாகவும்-

பொலிஸார் அவ்விடத்துக்கு வரவே அங்கு நிறுத்தப்பட்டிருந்த 4 கார்களுக்குதீவைத்து விட்டு அக்குழு ஓடிவிட்டதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவங்கள் தொடர்பாக 3 பேரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று கண்டி நகரில் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. சன நடமாட்டம் இல்லை.

நேற்று அங்கு நடந்த திருமண வைபவம் ஒன்றுக்குச் சென்ற சில தமிழ்ப் பெண்களின் நகைகள் சூறையாடப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. (இ-3)

## வீதி திருத்தவேலை

சுழிபுரம் - காரைநகர் வீதி திருத்த வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (இ-28)

## பொன் விழா...

(முதலாம் பக்கத் தொடர்)

குதல் நடத்தப்பட்டுள்ளது. பிரபாகரன் வந்து கூறினால் கூட இந்தப் பொன்விழா வைபவம் நிறுத்தப்பட மாட்டாது'' என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கண்டியில் தெரிவித்தார். (இ-9-21-3)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்)

டுள்ள சேதங்களை அவதானித்த அவர் திருத்த வேலைகளை உடனடியாக ஆரம்பிக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

விவசாய காணி அமைச்சர் டி. எம். ஜயரத்னவும் ஜனாதிபதியுடன் சென்றிருந்தார்.

ஜனாதிபதியின் பணிப்புக்கமைய நகர அபிவிருத்தி அதிகார சபை, அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் என்பன கட்டட இடிபாடுகளை அகற்றும் பணியை இன்று காலை ஆரம்பிக்கும் (இ-21 3-9)

## கண்டி..

(முதலாம் பக்கத் தொடர்)

சேதம் ஏற்படவில்லை என்றும் — அரசாங்கம் அறிவித்துள்ளது. இறந்த 11 பேரில் 2 வயதுக் குழந்தை ஒன்றும் அடங்கும்.

காயம் அடைந்தோர்கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயமடைந்தவர்களில் தலதா மாளிகையில் இருந்த பிக்கு ஒருவரும், நான்கு பெண் பொலீஸ் கான்ஸ்டபிள்களும்— அடங்குவர்.

இறந்தவர்களில் ஐந்து பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கெலிய கொட மின்தெனிய வாசிகளாவர்— எச். வி. சோமாவதி, எச். வி. சீலாவதி, எச். வி. சுமனாவதி, இஷாரா செனவிரத்தின, தயான் செனவிரத்தின ஆகியோரே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த 11 பொதுமக்களை விட தற்கொலையாளிகள் எனக் கருதப்படும் மூவரின் சடலங்கள் கண்டி பொலீஸ் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப் பட்டது. (இ-9-21.3)

## லொறியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

என கண்டிவாசிகள் தெரிவித்தனர்.

அந்த இடத்தில் பாரிய குழி ஒன்று ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலைக்கு பயன்படுத்தப்படும் மூன்று ஜாக்கட்டுக்களையும், ரீ 56 ரக துப்பாக்கிகள் இரண்டையும், கிரனேட்டுகளை ஏவப்பயன் படுத்தும் கருவி ஒன்றையும் இரண்டு வானொலிக் கருவிகளையும் 10 சுற்றுத் தோட்டாக்கள் என்பனவற்றையும் படையினர் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டது (இ-9-27)

## லக்ஷ்மன் ஜெயக்கொடி...

(முதலாம பக்கத் தொடர்)

கைக்குள் சென்றுவிட்டதாகவும் —

அமைச்சர்கள் சி. வி. குணரத்தின, டி. எம். ஜயரத்தின, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஆகியோர் அங்கு சென்றபோது ஒரு குழுவினர் எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் திருவனந்திரரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 26-01-98 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org